(3) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 8/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/20) 81 (2) வது பிரிவின்படி கட்டிடங்கள் அல்லது நிலம் இவை இரண்டின் ஆண்டு மதிப்பில் மேற்படி சட்டத்தில் 78-வது பிரிவின் விதித்துறைகளுக்கு உட்பட்டு, நகராட்சி மன்றத்தினால் முடிவு செய்யப்படக் கூடிய சதவிதங்களில் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். அரசுக் கட்டிடத்தில் அல்லது இரயில்வே கட்டிடத்தில் அல்லது சாதாரணமாக வாடகைக்கு விடப்படாத வகையைச் சேர்ந்ததும், நிர்வாக அதிகாரியின் கருத்துப்படி அதன் ஆண்டு மொத்த வாடகைத் தொகை மதிப்பிட முடியாததுமான ஒரு கட்டிடத்தைப் பொறுத்த வரையில் அதன் ஆண்டு வாடகை மதிப்பு நிலத்தின் மதிப்பிட்டு விலையும் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு தற்காலத்தில் ஆகும் தோராயச் செலவும் சேர்ந்த மொத்தத் தொகையில் தேய்மானத்திற்கு நியாய மான தொகை கழித்துக்கொண்டது போக எஞ்சியுள்ள தொகையில் ஆறு சதவீதம் என்று கருதப்பட வேண்டும்; மேலே சொல்லப்பட்ட தேய்மானக் கழிவுத் தொகை எந்த ஒரு நேர்விலும் மேற்படி கட்டுமானச் செலவில் பத்து சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது; மேலும் இயந்திரங்கள், மரச் சாமான்கள், இவற்றின் விலையை ஆண்டு வாடகை மதிப்பைக் கணக்கிடு வதற்குச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற மேற்படி சட்டத்தின் 82 (2)-வது பிரிவின் வரம்பு நிபந்தனை வகை செய்கிறது.

தொழிற் பேட்டைகளில் உள்ள கட்டிடங்களைப் பொறுத்தவரையில், நீர் வழங்கல், விளக்கு வசதி போன்ற வசதிகளை தொழில் துறையே செய்து கொடுக்கிறது. இவற்றை நகராட்சிகள் செய்து கொடுப்பதில்லை. எனவே, அத்தகைய கட்டிடங்களுக்குச் சொத்து வரியை மதிப்பிடுகையில் சில சலுகைகள் வழங்குவது அவசியமெனக் கருதப்படுகிறது. ஆகவே அத்தகைய

@ . . . ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சொத்துக்களின் ஆண்டு மதிப்பைக் கணக்கிடுவதற்காக, அச்சொத்துக்களின் மூலதன மதிப்பில் 6 சதவிதத்திற்குப் பதிலாக 4 சதவிதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவை கூறி, இதனை இம்மன்றமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 8/74) நிறைவேற்றப்பட்டது."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/74) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 22—4—1974 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.